மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி செயல் அலுவலரது நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர். திரு. சா.இளங்கோவன்

ந.க. எண்.79/2024 நாள் : 18.04.2024

**பொருள்:** மனைப்பிரிவு – தேனிமாவட்டம் – மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி – மேலச்சொக்கநாதபுரம் கிராம சர்வே எண்.149/4A2Aஇல் திட்டமில்லா பகுதியில் அமையும் 2106.00 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கியது – இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடுதல்.

**பார்வை:** 1)தேனி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களது நடவடிக்கைகள் ந.க.எண். THENI/MDZHR32A/2024/2024/TCP நாள்.05.04.2024

2) திரு.சு.பாண்டியராஜா த/பெ சுப்பிரமணி, க.எண்.5, தோகைமலை சந்து, போடிநாயக்கனூர் என்பவரது விண்ணப்பம். நாள். இல்லை

3)தானபத்திரம் எண்.1963/2024 மற்றும் 1964/2024 நாள்.04.04.2024.

4)அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.04.05.2017

5) அரசாணை எண்.18, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.04.02.2019

6) அரசாணை எண்.16, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.31.01.2020

7) அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.23.09.2020

8) அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.09.12.2020

9) அரசாணை(நிலை) எண்.112, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.22.06.2017

10)மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்.17.04.2024.

11)தொடர்புடைய ஆவணங்கள்.

*****

**ஆணை :–**

தேனி நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களது பார்வை 1இல் காணும் தொழில்நுட்ப அனுமதி கடிதத்தில், தேனி மாவட்டம், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி, மேலச்சொக்கநாதபுரம் கிராமம் சர்வே எண்.149/4A2Aஇல் திட்டமில்லா பகுதியில் அமையும் 2106.00ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனையிடத்தை வரன்முறைப்படுத்திட கோரி வரப்பெற்ற பார்வை 2இல் காணும் மனுதாரர்

திரு.சு.பாண்டியராஜா த/பெ சுப்பிரமணி என்பவரது விண்ணப்பத்தின் தொடர்ச்சியாக, நிபந்தனைகளுக்குட்பட்டு LP/AD DTCP(TD) NO-SWP/40/2024 என எண்ணிடப்பட்டு 10 மனைகளுக்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரரது பார்வை 3இல் காணும் தானப்பத்திரத்தின்படி, போடிநாயக்கனூர் பத்திரபதிவு அலுவலக ஆவண எண்.1963/2024 மற்றும் 1964/2024 நாள்.04.04.2024இன்படி பாதைக்கான இடத்தினை மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களது பெயரில் பதிவுசெய்யப்பட்டு மனைப்பிரிவுதாரரால் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், தேனி நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களது பார்வை 1 இல் காணும் கடிதத்தில், ஆய்வுக்கட்டணம், பூங்காவிற்கு மாற்றாக திறந்தவெளி ஒதுக்கீடு இடத்திற்கான (OSR FEES) தொகை, செண்டேஜ் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்தொடர்ச்சியாக, மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி மன்ற பார்வை 10இல் காணும் பேரூராட்சி மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதியின்படி, மேலச்சொக்கநாதபுரம் கிராமம் சர்வே எண்.149/4A2Aஇல் திட்டமில்லா பகுதியில் அமையும் 2106.00ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவினை தேனி நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களால் வரன்முறைப்படுத்தி LP/AD DTCP(TD) NO-SWP/40/2024 என எண்ணிடப்பட்டு 10 மனைகளுக்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கி வரப்பெற்றுள்ளதை மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கியுள்ளது.

பார்வையில் காணும் அரசாணைகள் 5,6 மற்றும் 8இன்படி மனையிடத்தில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும், அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.04.05.2017இன்படி நிலப்பயன் மாற்று கட்டணத்தொகையும் வசூல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதன்படி மனைப்பிரிவிற்கு பின்வரும் விவரப்படி தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | கட்டண விபரம் | தொகை | செ.சீ. எண் மற்றும் நாள். |
|---|---|---|---|
| 1 | கூர்ந்தாய்வுக் கட்டணம் | 10000 | 168/2024-2025<br>நாள்.18.04.2024 |
| 2 | மனைப்பிரிவு முறைப்படுத்துதல் கட்டணம் தனி மனை 1க்கு 1000 வீதம் 10 தனி மனைகளுக்கு | 10000 | |
| | மொத்தம் | **20000** | |

மேலும், நிலப்பயன்பாட்டு வகை மாற்று கட்டணமாக தொகை ரூ.3,900/– மட்டும் கருவூலக அரசு கணக்கு தலைப்பு எண். 021760800AS22709 இல் செ.சீ.எண்.20240418004688 நாள்.18.04.2024இன்படி செலுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் விவரங்களினடிப்படையில், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி, மேலச்சொக்கநாதபுரம் கிராமம் சர்வே எண்.149/4A2Aஇல் திட்டமில்லா பகுதியில் அமையும் 2106.00ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவினை தேனி நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களால் வரன்முறைப்படுத்தி LP/AD DTCP(TD) NO-SWP/40/2024 என எண்ணிடப்பட்டு 10 மனைகளுக்கு

நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளதன்படி இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

மேலும், மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து காலியிடவரி வசூலிக்கப்படும் என்ற நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் மேற்படி இடத்தில் தனது சொந்த செலவில் குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் மற்றும் தெருவிளக்கு அமைப்பதற்கான கட்டணத்தை மின்வாரியத்தில் நேரடியாக செலுத்தி அதற்கான இரசீதை இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இவ்வுத்திரவு வழங்கப்படுகிறது.

பின்னாளில் ஏதேனும் நிபந்தனைகளை கடைபிடிக்காத பட்சத்தில் இவ்வுத்திரவு தானாகவே ரத்தாகிவிடும் என்ற விவரமும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

செயல் அலுவலர்
மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி
தேனி மாவட்டம்.

இணைப்பு :- மனைப்பிரிவு வரைப்படம் மற்றும் நிபந்தனைகள்.

**பெறுநர்:–**

திரு.சு.பாண்டியராஜா

த/பெ சுப்பிரமணி,

க.எண்.5, தோகைமலை சந்து,

போடிநாயக்கனூர்

**நகல் :–**

1. தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தேனி அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
2. தேனி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. போடிநாயக்கனூர் வட்டாச்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. சார்பதிவாளர் , போடிநாயக்கனூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.